# WORD OF CHRIST
## (கிறிஸ்துவின் வசனம்)

மரம் 2 | கொலோசெயர் 3:16 | கனி 7

ஆசிரியர்: சகோ-அர்ச்சுனன் | II கொரிந்தியர் 3:6 | பிப்ரவரி 1994


**வாசகர்களுக்கு'**

நம்முடைய,பிதாவாகிய தேவனாலும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும் உங்களுக்கு கிருபையும் சமாதானமும் உண்டாவதாக

இப்பத்திரிக்கையை தொடர்ந்து வாசிப்பீர்கள் என்று நம்புகிறேன் இப்பூமியில் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவுக்குள் உங்களை வழிநடத்துவதே எனது நோக்கம். அவர் சொல்லியபடி நாம் நடத்தையிலும் வார்த்தையிலும் செயல்பட வேணடும். தேவன் நம்மில் எதிர்பார்க்கின்ற காரியங்கள் நிறைந்து காணப்பட வேண்டும். சங்35:28ல் தாவீது சொன்னதுபோல் நாள் முழுவதும் அவருக்கு துதியை சொல்லிக்கொண்டே இருக்க வேண்டும்

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினுடைய கிருபை நம்மனைவரோடும்கூட இன்றும் என்றும் சதாகாலமும் இருப்பதாக! ஆமென்

ஆசிரியர்

## LET US RISE UP AND BUILD
## எழுந்து கட்டுவோம் வாருங்கள்

அகலியாவின் குமரனாகிய நெகேமியா யூதரின் செய்தியையும் எருசலேமின் அலங்கம் இடிபட்டு அதின் வாசல்கள் அக்கினியால் சுட்டெரிக்கப்பட்டதின் செய்தியையும் விசாரித்து, அழுது, சிலநாளாய்த் துக்கித்து, உபவாசித்து, மன்றாடி, பரலோகத்தின் தேவனை நோக்கி ஜெபித்தான் மேலும் அர்தசஷ்டா ராஜாவிடம் உத்தரவு பெற்றுக் கொண்டு எருசலேமின் அலங்கத்தை கட்டுவோம் வாருங்கள் என்றுசொல்லி அந்த ஜனங்களை ஆயத்தப் படுத்திக் கொண்டு சென்றான் இச்செய்தியை கேள்விப்பட்ட சன்பல்லாத்தும் அவன் கூட்டத்தார்களும் அவர்களை இழிவாகப் பேசி நிந்தித்தார்கள் மேலும் வேலையைத் தடுக்கவும் கட்டுப்பாடு பண்ணினார்கள். இவ்வளவு போராட்டங்களுக்கு மத்தியில் நாங்கள் எடுத்த தீர்மானத்தை நிறைவேற்றியே ஆவோம் என்ற ஒரு தீர்மானத்தோடு நெகேமியாவும் அவனுடையவர்களும் அவரவர் ஒரு கையினாலே வேலைசெய்து மறுகையினாலே ஆயுதம் பிடித்துக்

கொண்டு வேலே செய்தார்கள். அவர்கள் நிமித்தம் இரவும் பகலும் ஜாமங்காக்கிறவர்களை வைத்தார்கள் என்று நெகேமியா புஸ்தகத்தில் வாசிக்கின்றோம்.

பிரியமானவர்களே! இப்படிப்பட்ட முன்மாதிரியான நெகேமியாவை நாம் நோக்கி பார்ப்போம். இன்றைய நாட்களில் அநேக சபைகள் பாழடிக்கப்பட்டு, சத்தியம் மாற்றப்பட்டு, பிரிவினைகள் வளர்ந்து உள்ள இந்த கடைசி நாட்களில் நாமும் நெகேமியாவைப்போல் நம் சபைகள் கட்டப்படும்படியாக அழுது, துக்கிந்து, உபவாசித்து, மன்றாடி பரலோகத்தின் தேவனே நோக்கி ஜெபிப்போம். எருசலேமின் அலங்கத்தைக் கட்டுவோம் வாருங்கள் என்று நெகேமியா சொல்லிய போது அவர்கள் **எழுந்து கட்டுவோம் வாருங்கள்** என்று மறுமொழி கொடுத்தார்கள் நெகே 2:17, 18ல் வாசிக்கின்றோம். அன்பானவர்களே! உங்கள் தீர்மானம் என்ன? இவர்களைப்போல நீங்களும் மறுமொழி கொடுத்து உங்கள் பிராந்திய சபையாகிய கிறிஸ்துவின் சபையைக் கட்ட ஆயத்தமாக இருக்கின்றீர்களா? அவர்களைப் போல நீங்களும் ஆயுதம் அனிந்தவர்களாக வேலைசெய்ய ஆயத்தமாயிருக்கிறீர்களா? அந்தவிதமான ஆயுதமா? இல்லே. பவுல்எபேசியருக்கு எழுதும்போது எபே 6:14ல் சத்தியம் என்னும் கச்சையை உங்கள் அறையில் கட்டினவர்களாயும், நீதியெனும் மார்க்கவசத்தைத் தரிந்தவர்களாகவும் சமாதானத்தின் சுவிசேஷத்திற்குரிய ஆயத்தம் என்னும் பாதரட்சையைக் கால்களிலே தொடுத்தவர்களாயும், பொல்லாங்கன் செய்யும் அக்கினியாஸ்திரங்களையெல்லாம் அவித்துப்போடத்தக்கதாய், எல்லாவற்றிகும் மேலாக விசுவாசம் எனும் கேடகத்தைப்பிடித்துக் கொண்டவர்களாயும், நில்லுங்கள் இரட்சணியமென்னும் தலேச்சீராவையும் தேவ வசனமாகிய ஆவியின் பட்டயத்தையும் எடுத்துக் கொள்ளுங்கள், இப்படிப்பட்ட ஆயுதத்தை எப்போதும் தரித்தவர்களாக இருந்து கொண்டு ஆவிக்குரிய சபையாகிய கிறிஸ்துவின் சபையை நாம் கட்டவேண்டும்.

இச் செய்தியை வாசிக்கும் எனதருமை சகோதரனே, சகோதரியே நெகேமியாவைப் போல இன்றே, இப்பொழுதே உங்களை நமதாண்டவராகிய இயேசுவுக்கு ஒப்புக்கொடுங்கள் அவர்கள் ஜாமங்காக்கிறவர்களை வைத்ததுபோல. நீங்களும் உங்கள் சபைக்கு ஜாமங்காக்கிறவர்களைப் போல இருந்து பாடுபடுங்கள் கர்த்தர் நெகேமியாவுக்கு வெற்றியை கட்டளையிட்டது போல உங்களுக்கும் உங்கள் சபைக்கும் சட்டளையிடுவாராக! ஆமென்!

---

எழுந்து கட்டுவோம் வாருங்கள் நெகேமியா 2:18

**O சபை செய்திகள்:**

1 டிசம்பர் 93 ல் பிறவிக் குருடரான ஜெபராஜ் என்பவர் கிறிஸ்துவின் உபதேசத்திற்குக் கீழ்படிந்து ஞானஸ்நானம்பெற்றுக் கொண்டார்.

2. ஜனவரி 30ம் தேதி சகோதரிகளுக்கான கூட்டம் வத்தலக்குண்டு கிறிஸ்துவின் சபையார்கள் கூடுமிடத்தில் நடைபெற்றது. அநேக சகோதரிகள் கலந்துகொண்டு ஆவிக்குறிய வளர்ச்சி குறித்து பகிர்ந்து கொண்டார்கள்.

3, ஜனவரி 20, 21 தேதிகளில் கேரளாவில் உள்ள கொச்சியில் 'தலைமைத்துவ பயிற்சி' நடைபெற்றது. பல இடங்களிலிருந்து வந்து கலந்து கொண்டார்கள். இக்கூட்டத்தை கொச்சி கிறிஸ்துவின் சபை ஊழியர் **Bro. Saju George** அவர்கள் நடத்தினார் என்பது குறிப்பிடத்தக்கது.

**O பரிசு**

ஜனவரி மாத வேத அறிவுப் போட்டியில் பரிசு பெறுபவர்கள்.

1. சகோ. எட்வின்ராஜ், மதுரை
2. ,, மாசிலாமணி, அரங்கபாளையம் [கரூர்]
3. சகோதரி மேரி சுகுணாபாய், மதுரை
4. ,, சத்யா, புதூர் ,,
5. சிறுவர். ஆன்ட்ரூஸ் நெல்சன், அரங்கபாளையம், (கரூர்)
6. சிறுவர். ஆனந்த், வாடிப்பட்டி (மதுரை)
7. ,, ஸ்டேன்லி ரூபன், வத்தலக்குண்டு
8. சிறுமி, ஜாஸ்மின் ஆரோக்கியமேரி, அம்மாபட்டி.
9. ,, ஸ்டெல்லா பபீனா, கொசவபட்டி, திண்டுக்கல்

**O. ஜனவரி மாத இதழின் விடைகள்**

1 காலக்குறிப்புகளுக்காக சங் 104:19
2 நாற்பது அப் 1:3
3 உன் கண்மணியைப்போல் நீதி 7:2
4 என்னைப் யோ 12:26
5 விடுதலையும் உண்டு II கொரி 3:17
6 27, 260, 7959 (**King James Version**)
7 தேவ
8 சிம்ரி
9 இல்லை
10 புறம்பே.

---

ஆறு காரியங்களைக் கர்த்தர் வெறுக்கிறார், ஏழும் அவருக்கு அருவருப்பானவைகள். நீதிமொழிகள் 6:16-19.

1. மேட்டிமையான கண்
2. பொய் நாவு
3. குற்ற மற்றவர்களுடைய இரத்தம் சிந்துங்கை
4. துராலோசனையைப் பிணைக்கும் இருதயம்
5. தீங்கு செய்வதற்கு விரைந்தோடுங்கால்
6. அபத்தம் பேசும் பொய்சாட்சி
7. சகோதரருக்குள்ளே விரோதத்தை உண்டு பண்ணுதல்

-சாலொமோன்

## புதிய ஏற்பாடு ஓர் கண்ணோட்டம்

| | | |
|---|---|---|
| புத்தகம் | - | 27 |
| அதிகாரம் | - | 260 [KING JAMES VERSION] |
| வசனம் | - | 7,959 |
| ஆசிரியர் | - | 8 பேர் எனசொல்லப்படுகிறது |
| எழுதிய காலம் | - | முதல் நூற்றாண்டுக்குள் இருக்கலாம் என சொல்லப்படுகிறது |
| நோக்கம் | - | புதிய உடன்படிக்கையை ஏற்படுத்த [எல்லோருக்கும் இரட்சிபின் வழி] |
| ஆரம்ப சபை | - | கி.பி. 33 [அப் 2:42-6:7] |
| தலைவர் | - | கிறிஸ்து [எபேசி 5:23] |
| சபை | - | கிறிஸ்துவின் சபை [ரோம 16:16] |

இப்புதிய ஏற்பாடு புத்தகத்தை மனப்பாடம் செய்து கொள்ள ஓர் ஆலோசனை ஒரு கை விரல்கள் ஐந்தை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள்

1. சுவிசேஷகம் 4- மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான்
2. வரலாறு 1- அப்போஸ்தலருடைய நடபடிகள்
3. சிறப்பு நிருபங்கள் 14- ரோமர், I கொரிந்தியர், II கொரிந்தியர், கலாத்தியர், எபேசியர், பிலிப்பியர், கொலோசெயர், I தெசலோனிக்கேயர் II தெசலோனிக்கேயர், i தீமோத்தேயு. ii தீமோத்தேயு தீத்து, பிலேமோன் எபிரெயர்.
4. பொதுவான நிருபங்கள் 7- யாக்கோபு, i பேதுரு II பேதுரு I யோவான் II யோவான், III யோவான், யூதா
5. தீர்க்கதரிசனம் I- வெளிப்படுத்தின விசேஷம்

---

நீதிமான் பொய்ப் பேச்சை வெறுக்கிறான் நீதி 13:5

## O சிறுவர் வேத அறிவுப் போட்டி விடைகள்

1. கர்த்தர் அப் 2:47
2. கிறிஸ்தவர்கள் அப் 11:26
3. ஆராய்ந்து அப் 17:11
4. அப்பம் அப் 20:7
5. காதாரக்கேட்டும் அப் 28:26

## O இம்மாத வேத அறிவுப் போட்டி

1. சுருபங்களை எடுத்து ஒட்டக சேணத்தின் கீழ் வைத்த பெண்மணி யார்?
2. நாள் பார்க்கிறவனும், அஞ்சனம் பார்க்கிறவனும், குனியக் காரனும் .........கர்த்தருக்கு எப்படிப்பட்டவன்?
3. சகோதரரே, எழுதப்பட்டதற்கு மிஞ்சி எண்ணவேண்டாம் என்று யார் சொன்னது?
4. பழைய மனுஷனையும் அவன் செய்கைகளையும் என்ன செய்ய வேண்டும்?
5. இருள் நீங்கிப்போகிறது, மெய்யான ஒளி இப்பொழுது என்ன செய்கிறது?
6. பழைய ஏற்பாட்டில் மொத்தம் எத்தனை புத்தகம், அதிகாரம் வசனம் உண்டு?
7. சாலமோன்ராஜாவுக்கு பின்பு வந்த யூதராஜாக்கள் எத்தனை பேர்?
8. எருசலேமின் அலங்கத்தைக் கட்டுவோம் வாருங்கள் என்று சொன்னவன் யார்:
9. தமிழ் வேதாகமம் எந்தெந்த பாஷைகளில் இருந்து முதலில் மொழிபெயர்க்கப்பட்டது?
10. உலகத்தில் அதிகம் விற்பனையாகும் புத்தகம் எது?

## O இம்மாத சிறுவர் வேத அறிவுப் போட்டி

(ரோமர் புத்தகத்திலிருந்து வசன ஆதாரத்துடன் நிரப்புக)

1. கிறிஸ்துவின் ............ நான் வெட்கப்படேன்.
2. பாவத்தின் .. .........மரணம்
3. ஆவியின் சிந்தையோ ............... சமாதானமுமாம்
4. கர்த்தராகிய ................தரித்துக் கொள்ளுங்கள்.
5. கிறிஸ்துவின் சபையார் ............ வாழ்த்துகிறார்கள்

---

அவரைத் தேடுங்கள், நீதியைத்தேடுங்கள், மனத்தாழ்மையைத் தேடுங்கள் செப் 2:3.

## தேவனுக்கு உகந்த உபவாசம்

1. அக்கிரமத்தின் கட்டுகளை அவிழ்க்கிறதும்.
2. நுகத்தடியின் பிணையல்களை நெகிழ்க்கிறதும்
3. நெருக்கப்பட்டிருக்கிறவர்களை விடுதலையாக்கிவிடுகிறதும்.
4. சகல நுகத்தடிகளையும் உடைத்துப்போடுகிறதும்.
5. பசியுள்ளவனுக்கு உன் ஆகாரத்தைப் பகிர்ந்துகொடுக்கிறதும்.
6. துரத்துண்ட சிறுமையானவர்களை வீட்டிலே சேர்த்துக் கொள்ளுகிறதும்.
7. வஸ்திரமில்லாதவனைக் கண்டால் அவனுக்கு வஸ்திரங் கொடுக்கிறதும்.
8. உன் மாம்சமானவனுக்கு உன்னை ஒளிக்காமலிருக்கிறதும்,

- ஏசாயா

இவ்விதழ் உங்களுக்கு இலவசமாக
அனுப்பப்படுகிறது.
படித்து பயன் பெறுங்கள், பெற்றுக் கொண்ட
சந்தோஷத்தை தெரியப்படுத்துங்கள்
தேவனுக்கு நன்றி செலுத்துவோம்.

கிறிஸ்துவின் பணியில்
உங்கள் சகோதரன்.

If Undelivered Please Return To:

**THE EDITOR**

**WOrd of christ, Post BOX NO. 5**

**BATLAGUNDU - 624202 Anna Dt.**

**For Priate Circulation only.**

Puplished by Batlagundu Church of Christ and
Printed at Shanthi Printers Batlagundu.